# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.

**Prosecution:**PW.4

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 121/2015**

| | | | |
|---|---|---|---|
| **Name** | லதா | **W/o.** | முத்துக்கருப்பன் |
| **Village** | சித்தலூர் | **Taluk** | சிவகங்கை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.4 |
| **Date** | 22-08-2022 | **Age** | 40/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 22.08.2022.**

**முதல் விசாரணை:**

நான் சித்தலூர் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் விவசாயக் கூலி வேலை செய்து வருகிறார். எனது தகப்பனார் பெயர் சிங்கமுத்து ஆகும். எனது அம்மா பெயர் முத்துராமு ஆகும். எனது உடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து ஐந்து நபர்களாகும். நான், தீபா, ரூபா, வாச்சாரக்காளை, முருகேஸ்வரன் ஆகியோர்கள் எனது உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். எங்களுக்கும் 1வது எதிரி மகாதேவன் குடும்பத்திற்கும் நடைபாதை பிரச்சினை சம்பவத்திற்கு 2 வருடங்களுக்கு முன்பாகவே இருந்து வந்தது. சம்பவத்திற்கு நான்கு நாட்களுக்கு முன் எனது அம்மாச்சியை மீனாட்சியை 2வது எதிரி பஞ்சவர்ணம் விலக்கமாற்றால் அடித்து விட்டார். 31.07.2012 அன்று செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு எனது அம்மா தம்பி வாச்சாரக்காளை,

தம்பி முருகேஸ்வரன், தங்கை தீபா ஆகியோர் எனது தங்கை ரூபாவின் நினைவு நாளிற்கு சாமி கும்பிடுவதற்காக சிவகங்கையிலிருந்து வந்தார்கள். காலை 11.00 மணியளவில் சித்தலூர் வீட்டுவாசலில் டாடா சுமோ காரை நிறுத்தினார்கள். எதிரிகள் 6 பேரும் தேவுடியா மக்களை குடும்பத்தோடு குத்திக் கொல்லுங்கடா என்று மகாதேவன் சொன்னார். எனது தாயார் காரிலிருந்து இறங்கினார். அப்போது பஞ்சவர்ணமும், அழகுமலையும் எனது தாயாரை கட்டிப்பிடித்துக்கொண்டார்கள். 1வது எதிரி மகாதேவன் வேல் கம்பால் எனது தாயாரின் இடதுப்பக்க விலாவில் மாறி மாறி குத்தினார். என் தம்பி வாச்சாரக்காளை வண்டியை விட்டு இறங்கி ஓடி வந்தார். ராஜ்குமார் வாச்சாரக்காளையை கத்தியால் இடது பக்க விலாவில் குத்தினார். செல்லதுரை கம்பியால் வாச்சாரக்காளையின் இடது பக்க தலையில் அடித்தார். முத்துப்பாண்டி வாச்சாரக்காளையின் இடது பக்க தலையில் கம்பால் அடித்தார். தம்பி முருகேஸ்வரன் ஓடிவந்தார் அவரை ராஜ்குமார் இடது பக்க விலாவில் கத்தியால் குத்தினார். அந்த இடத்திலிருந்து நான் ஓடி வாருங்கள் எனக் கத்தினேன். எனது கணவர் முத்துக்கருப்பன், முத்துக்குமார், மாமா மாரிமுத்து ஓடிவந்து எனது தாயாரை தூக்கி வண்டியில் ஏற்றினார்கள். அடுத்து வாச்சாரக்காளையையும் முருகேஸ்வரனையும் வண்டியில் ஏற்றி சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். அங்கு மருத்துவர் எனது தாயாரை பரிசோதனை செய்து அவர் இறந்துவிட்டதாக கூறினார். என் தம்பி வாச்சாரக்காளையை சீரியஸாக இருப்பதால் மதுரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றுவிட்டார்கள். என் தம்பி முருகேஸ்வரன் சிகிச்சை எடுத்துக்கொண்டு சிவகங்கை தாலுகா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். நான் சிவகங்கை அரசு மருத்துவமனையிலேயே

இருந்துவிட்டேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் நடந்ததை கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனது தங்கை ரூபா இறந்தது குறித்து குறிப்பு எனது தாயார் வைத்திருந்தார். எனது கணவர் முத்துக்கருப்பன் 2வது எதிரி பஞ்சவர்ணத்தின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 2வது எதிரி பஞ்சவர்ணம் எனது நாத்தனார் என்றால் சரிதான். நான் சிவகங்கையில் 10 வருடமாக குடியிருந்து வருகிறோம். எனது ரேஷன் கார்டு, ஆதார் கார்டு ஆகியவை சித்தலூரில் உள்ளது. என் கணவர் முத்துக்கருப்பணுக்கு வீடு சித்தலூரில் உள்ளது. 1ம் எதிரி மகாதேவன் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் 2 தெரு தள்ளி இருக்குமா என்றால் 4 தெருக்கள் தள்ளி இருக்கும். எனது கணவர் முத்துக்கருப்பன் 1ம் எதிரி மகாதேவனின் வீட்டை இடித்தது சம்மந்தமாக 2011ம் வருடத்தில் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் குற்ற எண்.109/2011ல் வழக்கு இருந்தது என்றால் சரியல்ல. அவ்வழக்கில் ஐயப்பன், சதீஷ், என் கணவர் முத்துக்கருப்பன் மற்றும் என்னையும் எதிரியாக சேர்த்திருந்தார்கள் என்றால் அது பொய் கேஸ் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் ஐயப்பனுக்கும் மகாதேவனுக்கும் தான் பிரச்சினை அதில் என்னை சேர்த்துவிட்டார்கள். 2ம் எதிரியின் சகோதரியின் மகள் நித்யாவை ஐயப்பனுக்கு பெண் கேட்டு தரவில்லை என்பதால் பிரச்சினை என்று அந்த வழக்கில் கூறப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது குறித்து ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் இங்கு 3வது எதிரியாக இருக்கும் ராஜ்குமாரை தாக்கி காயத்தினை ஏற்படுத்தியும் தவிர 1வது எதிரியின் வீட்டை அடித்து ஓடுகளை நொறுக்கியதாகவும் கட்டிடத்தை சேதப்படுத்தியதாகவும் வழக்கு என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. அந்த வழக்கு சம்மந்தமாக ஐயப்பன், சதீஷ், என் வீட்டுக்காரர்

ஆகியோர் ஜாமீன் எடுத்தார்கள். அந்த வழக்கு நடைபெற்று 1 வருடத்திற்குள் இந்த சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. எனது அம்மா முத்துராமு, அப்பா சிங்கமுத்து, தம்பி வாச்சாரக்காளை மற்றும் முருகேஸ்வரன் ஆகியோர் சிவகங்கையில் பாரதி நகரில் தான் குடியிருக்கிறார்கள். பாரதி நகரிலிருந்து தான் அன்று டாடா சுமோ காரில் வந்தார்கள். சித்தலூரில் அன்று பள்ளிக்கூடம் நடந்து கொண்டிருந்தது. எங்கள் ஊரில் சுமார் 750 நபர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரில் வீடுகள் மிக அருகிலும் இல்லை மிக தூரத்திலும் இல்லை. தெருக்களில் உள்ள வீடுகள் தொடர்ச்சியாக உள்ளது என்றால் சரிதான். அன்று சாமி கும்பிடுவதற்கு எனது தகப்பனார் வரவில்லை. ரூபாவிற்கு நினைவு நாள் கொண்டாடுவதற்காக என் சகோதரர்கள் வரவில்லை என்றாலும் அவர்கள் வந்த நோக்கம் வேறு என்றாலும் சரியல்ல. எனக்கு என் சகோதரி ரூபா எந்த தேதியில் இறந்தார் என்று தெரியாது. என்னுடைய கணவரின் பெயரில் உள்ள வீடு யார் பெயரில் உள்ளது என்றால் அது எங்கள் மாமனார் பெயரில் தான் உள்ளது எங்கள் பெயரில் கிடையாது. 1வது எதிரி அவர் வசித்து வரும் வீட்டில் நான் பிறந்ததிலிருந்து அவர் அங்கு தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். 2011ம் வருடத்தில் சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் எங்கள் மீது 3வது எதிரி ராஜ்குமார் தாக்கல் செய்திருந்த வழக்கை வாபஸ் பெறச் சொல்லி நானும் எனது கணவரும் அவர்கள் எங்களுக்கு உறவினர்கள் என்பதால் வாபஸ் பெறச் சொல்லி தொந்தரவு செய்து வந்தோம் என்றால் எனக்கு அது குறித்து ஞாபகம் இல்லை. 1வது மகாதேவன் வீட்டிற்கு அருகில் என் சகோதரனுக்கோ, என் தகப்பனாருக்கோ வீடு இருப்பது குறித்து அதற்கான ஆவணங்களை போலீசார் என்னை விசாரிக்கும்போது கேட்கவும் இல்லை நான் கொடுக்கவும் இல்லை. சாமி கும்பிட வேண்டும் என்றால் என்னென்ன ஏற்பாடுகள் செய்து கொண்டு வருவார்கள் என்று

எனக்கு தெரியும். தேங்காய், பழம், மாலை ஆகியவற்றை என் சகோதரர்கள் டாடா சுமோவில் வரும் போது கொண்டு வந்தார்கள். அந்த பொருட்கள் என் அம்மாவை குத்தும் போது சிதறிவிட்டது. சிதறிக்கிடந்த பொருட்கள் அதே இடத்தில் தான் இருந்ததா என்று எனக்கு ஞாபகம் இல்லை. மாரிமுத்து சம்பவயிடத்திலிருந்து 4 தெரு தள்ளி உள்ள என் வீட்டிற்கருகில் இருக்கிறார். முத்துக்குமார் சிவகங்கையில் தான் வசித்து வருகிறார். முத்துக்குமார் எனக்கு தாய்மாமா மகன் ஆவார். நான் ள் தாயாரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது உடன் இருந்தேன். மருத்துவமனையில் மருத்துவர் விசாரிக்கும்போது சம்பவம் பற்றி நானே தான் சொன்னேன். சம்பவம் 10 அல்லது 15 நிமிடங்கள் இருந்திருக்கும். நான், எனது மாமா மாரிமுத்து, என் கணவர் முத்துக்கருப்பன், உறவினர் முத்துக்குமார் ஆகியோர் இருந்தும் சம்பவத்தை தடுக்க முயற்சி செய்யவில்லை என்று கேட்டால் நாங்கள் தள்ளி பின்புறமாக இருந்ததால் சத்தம் கேட்டு ஓடி வந்து தூக்கி விட்டார்கள். நான் சத்தம் கேட்கும்போது என் அம்மாவை நோக்கி வந்துக் கொண்டிருந்தேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல முதலில் என் தாயார் வண்டியிலிருந்து இறங்கிய போது அவரை 2 மற்றும் 6ம் எதிரிகள் பிடித்துக் கொண்டதாகவும், அவருக்கு காயம் ஏற்பட்ட பிறகு 2ம் சாட்சி வாச்சாரக்காளை இறங்கி வந்ததாகவும், அவருக்கு காயம் ஏற்பட்ட பிறகு 1ம் சாட்சி முருகேஸ்வரன் வண்டியிலிருந்து இறங்கி வந்ததாகவும், கூறியதைப் போல காவல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் என் தாயாரை தூக்கும்போது குத்துப்பட்ட இடத்தில் அவருக்கு இரத்தம் வடிந்துக்கொண்டிருந்தது. என் அம்மாவை நான் தூக்கும் போது அவருக்கு வடிந்த இரத்தம் என் உடையில் பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எங்கள் ஊரில் எங்கள் குடும்பத்திற்கு சம்மந்தமில்லாத மற்ற நபர்கள் நிறைய பேர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

எனக்கு சத்தம் கேட்டதை போல் எங்கள் ஊரில் உள்ள மற்றவர்களுக்கும் சத்தம் கேட்டிருக்கும் என்றால் அவ்வாறு கேட்டிருக்க ஆட்கள் இல்லை கண்மாய் வேலைக்கு சென்றுவிட்டார்கள். நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், பொய்யாக ஜோடித்து வழக்கு தொடுத்துள்ளதால் தான் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்களை மட்டும் சாட்சிகளாக போட்டு விசாரித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ சாட்சி இல்லை என்றும் நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சித்தலூரில் சிங்கமுத்துவிற்கும் எனது அம்மா முத்துராமுவிற்கும் வீட்டு வரி ரசீது இல்லை என்றால் எனது தகப்பனாருக்கு வீட்டு வரி ரசீது உள்ளது. நான் அந்த வீட்டில் இருப்பதாக சொல்லும்போது அந்த வீட்டின் முகவரி பதிவு செய்யப்பட்ட வீட்டு வரி ரசீது எதுவும் காவல் விசாரணையில் நான் கொடுக்கவில்லை ஒரு வேளை எனது தாயார் கொடுத்திருக்கலாம். நான் என் கணவர், என் சகோதரர்கள் அனைவருக்கும் 3ம் எதிரி எங்கள் மீது 2011ல் போட்ட வழக்கை வாபஸ் பெறவில்லை என்று அவர்கள் மீது கோபம் என்றால் சரியல்ல. அவர்களின் வீடு பொரம்பபோக்கில் இருப்பதால் அவர்களை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்று என் சகோதரர்கள் 31.07.2012ம் தேதியில் 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்று அவர்களை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. முதல் வருடம் என் கணவர், ஐயப்பன், சதீஷ் ஆகியோர் 1ம் எதிரியின் வீட்டை சேதப்படுத்தியதை சீர்படுத்திக்கொண்டிருந்த போது தான் மறுவருடம் இந்த சம்பவம் நடந்து என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் வீட்டை மராமத்து செய்து கொண்டிருந்த போது இறக்கி வைத்திருந்த கம்பிக் கிராதி கதவில் என் தாயார் மோதிக் கொண்டதால் தான் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சாமி கும்பிட அங்கு வரவில்லை என்றும் என் அம்மாவிற்கு ஏற்பட்ட

காயத்திற்கு காரணம் என் சகோதரர்கள் தான் என்றால் சரியல்ல. என் தாயார் இறந்துவிட்டதை சாதகமாக எடுத்துக்கொண்டு ஏற்கனவே எதிரிகள் மீது கோபமாக இருந்தக் காரணத்தினால் பொய்யாக இந்த வழக்கை ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல எதிரிகள் யாரும் ஆயுதங்களை எங்கள் குடும்பத்தார் மீது பிரயோகப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் என் தம்பி சொல்லிக் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**ஒப்பம் ஆர்.சத்யதாரா, எம்.ஏ., எம்.எல்., 22.08.2022**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**சிவகங்கை**

**//உண்மை நகல்//**